# நடத்தை விதி









BRAND SAFWAY®

At Work For You™

# தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியிடமிருந்து வந்துள்ளதோர் செய்தி





## பிராண்ட்சாஃப்வே குழு உறுப்பினர்கள்:

நமது உலகளாவிய அணியின் பன்முகத்தன்மை, நம்மை ஒன்றிணைக்கும் கலாச்சாரம், நியாயம் மற்றும் நாணயத்துக்கு நற்பெயர் பெற்றுள்ள நிறுவனம் என்பன குறித்து நாங்கள் பெருமைப்படுகிறோம். பிராண்ட் இன்டஸ்ட்ரியல் சர்வீசஸ், இங்க். (Brand Industrial Services, Inc.) மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (“பிராண்ட்சாஃப்வே (BrandSafway)”) ஒரு ஊழியராக, நமது நற்பெயரைப் பேணுவதற்கும் அதனை இன்னும் மேம்படுத்தவும் எங்களுக்கு உங்கள் ஆதரவு தேவை, ஒரு நியாயமான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும், நமது தொழில்துறையில் மிக உயர்ந்த தரங்களை நிலைநிறுத்தவும், எங்களுக்கு உங்களது ஆதரவு அவசியமாகிறது.

நாம் வாழ்கின்ற, பணிபுரிகின்ற, ஒருவரோடொருவர் இணைந்துள்ளதும், வெளிப்படையானதுமான இவ்வுலகில் நமது வாடிக்கையாளர்கள், சகாக்கள் மற்றும் சமூகங்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்து வருகின்றன. தயவுசெய்து, இந்த நடத்தை விதியை கவனமாகப் படித்துப் பார்ப்பதன் மூலமும், இதிலுள்ளவற்றைப் புரிந்துகொள்வதன் மூலமும், நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் இதன் விதிகளைப் பயன்படுத்துவதன் மூலமும், இந்த எதிர்பார்ப்புகளை நிவிர்த்தி செய்ய எங்களுக்கு உதவுங்கள். நாம், நியாயம் மிக்க கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும், நாணயம் கொண்ட நமது நற்பெயரை நிலைநிறுத்துவதற்கும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம், தொடர்ந்து புதிய வாடிக்கையாளர்களை வென்று, நமது தற்போதைய வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொண்டு, நமது நிறுவனத்தை நமது தொழில்துறையில் விரும்பத்தக்க முதலாளியாகவும், அனைவருக்கும் வேலை செய்வதற்கு சிறந்த இடமாகவும் மாற்றுவோம்.

பிராண்ட்சாஃப்வே நிறுவனத்தின் பணியாளர்கள் அனைவருக்கும், நமது பிரதிநிதியாகச் செயல்படுகிற மூன்றாம் தரப்பினருக்கும் பொருந்தும் நமது இந்நடத்தை விதியை, உங்களுக்கும் நமது உலகளாவிய குழுவில் உள்ள அனைவருக்கும் நமது கலாச்சாரத்தைப் பாதுகாக்கவும், நாணயத்துடன் ஒன்றிணைந்து செயல்படவும், தொடர்ந்து சரியானதைச் செய்ய உதவும் வழிகாட்டுதல்களை வழங்கவுமே உருவாக்கியுள்ளோம். நீங்கள், என்ன செய்ய வேண்டும் அல்லது எப்படி செயல்பட வேண்டும் என்று உறுதிபடத் தெரியாததோர் சூழ்நிலையில் இருப்பதாகக் காண்கிற பட்சத்தில், அல்லது நீங்கள் இந்நடத்தை விதி மீறல் ஒன்று நடந்திருப்பதாக நினைக்கிற பட்சத்தில், அல்லது உங்களுக்கு இணக்கப் பிரச்சினை குறித்த கேள்வியொன்று இருக்கிற பட்சத்தில், தயவுசெய்து உங்களுக்கு உதவ நாங்கள் இங்கே இருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் சரியானதைச் செய்வதில் உங்களுக்கு உதவவும், உங்களுக்கு ஆதரவாக நிற்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

தயவுசெய்து பேசுங்கள், உங்கள் ஐயங்களை பகிர்ந்து கொண்டு, நடந்திருக்க வாய்ப்புள்ள விதிமீறல்களைப் பற்றி முறையிடுங்கள். திறந்த மனதோடும், நேர்மையாகவும் தகவல் தொடர்பு கொள்வது விதிவிலக்காக அல்லாமல் அவை எதிர்பார்க்கப்படுகிற ஓர் சூழலை உருவாக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். உங்கள் மேற்பார்வையாளர், மேலாளர் அல்லது மனிதவளப் பிரதிநிதியை அணுகுவது உங்களுக்கு சௌகரியமானதாகப் படவேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம். அதோடு கூட, கூடுமான இடங்களில், நாணயம் சம்பந்தமான சிக்கல்கள் அல்லது ஐயங்களைப் பற்றி புகார் செய்ய, 'பிராண்ட்சாஃப்வே எதிக்ஸ்பாயிண்ட் ஹாட்லைன்' என்ற நேரடித் தொலைபேசி (“ஹாட்லைன்”) வசதி, ஒரு நம்பகமான முறையை ஏற்படுத்தித் தருகிறது.

நமது நடத்தை விதியைப் படித்துப் புரிந்துகொள்ள நேரம் ஒதுக்கியதற்கும், பிராண்ட்சாஃப்வே நிறுவனத்தின் மதிப்புகள் மீதான உங்கள் அர்ப்பணிப்பிற்கும், நமது தொழில்துறையில் மிக உயர்ந்த தரங்களை தாங்கிப் பிடிப்பதற்கு உதவியமைக்கும் நன்றி. நமது தொழில்துறையில் வரலாற்றை உருவாக்க நாம் ஒருங்கிணைந்து செயல்படுவோம், வாரீர்!



**கார்ல் ஃபெசென்டன்**
தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி
ஒருங்கிணைக்கப்பட்ட பிராண்ட் இன்டஸ்ட்ரியல் சர்வீசஸ்.



# உள்ளடக்க அட்டவணை


அறிமுகம் மற்றும் நோக்கம்
உங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது
பிராண்ட்சாஃப்வே தலைவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது
நாணயம் பற்றிய கவலை எழுப்பப்படும்போது என்ன நடக்கும்
வியாபாரம் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் 07

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குதல்
தகவல் எவ்வாறு தெரிவிக்கப்படுகிறது
நிறுவனச் சொத்து 17

பிராண்ட்சாஃப்வேயின் சமூகம்
சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு
பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல்
விட்டுக் கொடுப்புக்கள் மற்றும் முடிவுகள் 23



# அறிமுகம் மற்றும் நோக்கம்

பிராண்ட் இன்டஸ்ட்ரியல் சர்வீசஸ் ஜஎன்சி மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் ("பிராண்ட்சாஃப்வே"), தாங்கள் மேற்கொள்ளும் அனைத்து வகையான நடவடிக்கைகளிலும் நேர்மை, நியாயமான கையாளுதல், பரஸ்பர மரியாதை மற்றும் மிக உயர்ந்த நன்னெறி சார்ந்த நியமங்களுக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன. இந்த நாணயத்தின் உணர்வைத் தழுவிக் கொள்வதற்கும், இணக்கம் மற்றும் அனைத்தும் உள்ளடங்கிய எமது கலாச்சாரத்தை ஆதரிப்பதற்கும் எங்களுடன் இணையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நமது புகழ், நமது செயல்பாடுகளின் வாயிலாகவும், பிராண்ட்சாஃப்வே சார்பாக பணிபுரியும் அனைவரது நடத்தை மூலமாகவுமே ஒவ்வொரு நாளும் கட்டமைக்கப்படுகிறது. எனவே, வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள், பொதுமக்கள் மற்றும் சக பணியாளர்களுடனான நமது தொடர்புகள் எப்போதும் நிந்தனைகளைத் தவிர்த்து உயர் நிலையில் இருந்தாக வேண்டும். இந்த காரணத்திற்காக, பிராண்ட்சாஃப்வே சார்பாக செயல்படும் ஒவ்வொருவரோடு கூடுதலாக, இங்கு கோடிட்டுக் காட்டியுள்ள கொள்கைகள் உங்களது இரண்டாவது இயல்பாக மாறுவதுமுக்கியமானதாகும்.

வணிகத் தேவைகள் மற்றும் வர்த்தக ரீதியிலான வெற்றியை அடைவது ஒருபுறமிருக்க, நாங்கள் எப்போதும் உங்களையோ, பிராண்ட்சாஃப்வே பணியாளர்கள் எவரையுமோ அல்லது நமது நிறுவனத்தின் சார்பாக வியாபாரம் செய்யும் எவரையுமோ, பிராண்ட்சாஃப்வேன் நலன்களை முன்னேற்றுவதற்காக அவர்களது தனிப்பட்ட நாணயத்தில் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. அதுபோன்ற எந்த சமரசமும், ஒருகட்டத்தில் நமது மிகச் சிறந்த நன்மதிப்புகளை குறைத்து மதிப்பிடவே செய்யும்.

அதோடு, நெறிமுறையான வணிக நடத்தை பற்றிய கேள்விகள் எழக்கூடிய ஒவ்வொரு சூழலையும், பிராண்ட்சாஃப்வே நடத்தை விதி தீர்த்து வைக்காது, தீர்த்து வைக்க முடியாது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். அதை விடுத்து, இங்கு கோடிட்டுக் காட்டியுள்ள கொள்கைகளை பல்வேறு விதமான சூழ்நிலைகளுக்குப் பயன்படுத்த எண்ணம் கொள்ள வேண்டும். இந்த நடத்தை விதியில் குறிப்பிட்டிருக்காத ஒரு சூழ்நிலை எழும் பட்சத்தில் அல்லது உங்கள் இருப்பிடத்தில் பொருந்தக்கூடிய உங்கள் பகுதிக் கொள்கைகளைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள, தயவுசெய்து உங்கள் மேலாளர், மனிதவளப் பிரதிநிதி அல்லது தலைமை இணக்க அலுவலரை தொடர்பு கொள்ளவும்.

தயவுசெய்து கவனிக்கவும்: இந்த நடத்தை விதி அல்லது அதனுடன் தொடர்புடைய தகவல்தொடர்புகளில் உள்ள எதுவும், வேலைவாய்ப்பு ஒப்பந்தம் ஒன்றையோ அல்லது வேலைவாய்ப்பு கால அளவு எதையுமோ உருவாக்குவதோ அல்லது மறைமுகமாகச் சொல்வதோ இல்லை.

### பிராண்ட்சாஃப்வேயின் நடத்தை விதித் தொகுப்பை யார் பின்பற்ற வேண்டும்?

பிராண்ட்சாஃப்வே நடத்தை விதியை, பிராண்ட்சாஃப்வே நிறுவனத்திற்காகவும், அதன் துணை நிறுவனங்கள் மற்றும் உப நிறுவனங்களுக்காகவும், அவற்றின் சார்பாகவும் பணியாற்றும் அனைத்து தனிநபர்களும், நிறுவனங்களும், அவர்கள் இருக்கும் இடத்தை அல்லது பதவியைப் பொருட்படுத்தாமல் பின்பற்றியாக வேண்டிய முக்கியமான கொள்கைகளை கோடிட்டுக்காட்டுகின்றன. இந்த விதிக்கு இணங்கி நடப்பது, நமது பணியாளர்கள் ஒவ்வொருவரின் பொறுப்பாகும் ஆலோசகர்கள், முகவர்கள், விற்பனை பிரதிநிதிகள், விநியோகஸ்தர்கள் மற்றும் சுயாதீன ஒப்பந்தக்காரர்கள் போன்ற பிராண்ட்சாஃப்வே நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்றாம் தரப்பினரும் இந்த விதிக்கும், நமது இணக்கக் கலாச்சாரத்திற்கு இணங்க நடப்பது அவசியமாகும்.

இந்த நடத்தை விதியை அமுல்படுத்துவதற்கும் அதனைச் செயல்படுத்துவதற்கும் பிராண்ட்சாஃப்வேயின் தலைமை இணக்க அலுவலரே பொறுப்பாக இருப்பார்.

- நிலையான நிர்வாகம் மூலம் விதியை நிர்வகித்தல் மற்றும் அதனை மேற்பார்வையிடுவதுடன், தேவைக்கேற்ப மற்றும் உள்ளூர் சட்டங்களின்படி பயன்படுத்தலும்.
- விதி மீறல்கள் குறித்த விசாரணைகளை நடத்துதல் அல்லது மேற்பார்வை செய்தல்
- தவறான நடத்தைக்கு பொருத்தமான தீர்வுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் எந்தவொரு தவறான நடத்தையும் மீண்டும் நிகழாமல் தடுக்க நடவடிக்கை எடுத்தல்;
- எந்தவொரு முறைகேடு அல்லது விதி மீறல்களுக்கும் பதிலளிக்கும் வகையில், தற்காலிகப் பணிநீக்கம் மற்றும் நிரந்தரப் பணிநீக்கம் உள்ளிட்ட, இவை மட்டும் தான் என்றில்லாத நடவடிக்கை வரை, அதற்குத் தகுதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் அதனை உறுதி செய்தல்

- விதியின் கீழ் வரும் தலைப்புகளுக்கு அவசியமான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி திட்டங்களை ஒருங்கிணைத்தல்; மற்றும்
- கேள்விகளுக்கு பதிலளித்தல் மற்றும் பிராண்ட்சாஃப்வே நடத்தை விதி குறித்து பணியாளர்களுக்கு வழிகாட்டுதல் அல்லது இந்த விதி பொருந்தும் மூன்றாம் தரப்பினருக்கு வழிகாட்டுதல்.

### பிராண்ட்சாஃப்வே விதி மற்றும் கொள்கைகள் எங்கே பொருந்தும்

பிராண்ட்சாஃப்வே வணிகத்தை நடத்தும் எந்த இடத்திலும், பிராண்ட்சாஃப்வே நடத்தை விதி மற்றும் பொருந்தக்கூடிய நிறுவனக் கொள்கைகள், சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு பொருந்தும். பிராண்ட்சாஃப்வே உலகெங்கிலும் வணிகம் செய்வதால், நமது செயல்பாடுகள் பல்வேறு நாடுகள், அரசாங்கங்கள் மற்றும் முகவர் நிறுவனங்களின் சட்டங்கள் மற்றும் விதிக்கு உட்பட்டவையாகவே உள்ளன.

இந்த விதிக்குக் கூடுதலாக, ஒவ்வொருவருக்கும், அவர்கள் பணிபுரியும் அல்லது வியாபாரம் செய்யும் அமைவிடங்களின் உள்ளூர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிந்துகொள்வதற்கும் பின்பற்றுவதற்கும் வ். உள்ளூர் சட்டங்களுக்கு மேலதிகமாக, உங்கள் உள்ளூர் வணிகம் மற்றும் வியாபார நடவடிக்கைகள் வெளிநாட்டு சட்டங்களுக்கும் உட்பட்டிருக்கலாம் என்பதையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பிராண்ட்சாஃப்வேயின் உலகளாவிய செயல்பாடுகள் அமெரிக்காவின் வெளிநாட்டு ஊழல் நடைமுறைச் சட்டத்திற்கும் மற்றும் இங்கிலாந்தின் இலஞ்சச் சட்டத்திற்கும் உட்பட்டவையாகும்.

உங்கள் செயல்பாடுகளுக்கு பொருந்தக்கூடிய நடைமுறைகள் குறித்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், நீங்கள் பிராண்ட்சாஃப்வே தலைமை இணக்க அலுவலர் அல்லது பிராண்ட்சாஃப்வே சட்டத் துறையை தொடர்பு கொள்ள வேண்டும்.



# உங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது

நமது இணக்கம் மற்றும் நெறிமுறை நடத்தை கலாச்சாரம் ஒவ்வொரு பிராண்ட்சாஃப்வே பணியாளரும் பிராண்ட்சாஃப்வே நடத்தை விதிகளைப் புரிந்துகொண்டு பயன்படுத்துவதைப் பொறுத்தே இருக்கிறது. நாணயதிற்கான நமது நற்பெயரைப் பேணுவதிலும், நியாயமான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய கலாச்சாரத்தை உருவாக்க எங்களுக்கு உதவுவதிலும் உங்கள் பங்கின் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம். ஒவ்வொரு பிராண்ட்சாஃப்வே பணியாளரையும் எதிர்பார்க்கிறோம்:

I. நமது விதி மற்றும் கொள்கைகளைப் புரிந்து கொள்ளுங்கள்:

- பிராண்ட்சாஃப்வே நடத்தை விதிகளைப் படியுங்கள், அதனை புரிந்து கொள்ளுங்கள், அதனை நடைமுறைப்படுத்துங்கள்.
- தேவையான அனைத்து நெறிமுறைகள் மற்றும் இணக்க பயிற்சி திட்டங்களில் கலந்து கொள்ளுங்கள்.
- உங்களது தொழில், உங்களது வணிக பிரிவு மற்றும் உங்களது இருப்பிடத்திற்கான குறிப்பிட்ட சில பிரத்யேகமான கொள்கைகள் மற்றும் விதியுடன் உங்களைப் பழக்கப்படுத்துங்கள்.
- நடத்தை நெறிமுறையின் எந்தவொரு விடயத்திலும் உங்களுக்கு விளக்கம் தேவைப்பட்டால், உங்கள் மேலாளர், மனித வள பிரதிநிதி அல்லது பிராண்ட்சாஃப்வே தலைமை இணக்க அலுவலரை அணுகவும்.

II. நாணயத்துடன் செயல்படுங்கள்:

- உங்கள் செயல்பாடுகளை நேர்மையாகவும் துல்லியமாகவும் கணக்கிடுங்கள்.
- வேறொரு நபர் அறிவுறுத்தினாலும் கூட, உங்கள் தனிப்பட்ட நாணயத்தை சமரசம் செய்யாதீர்கள். மற்றொரு நபரின் வேண்டுகோளின் பேரில் செயல்படுவது இந்த விதியை மீறுவதற்கான நியாயமல்ல.
- இந்த விதியையோ அல்லது எந்தவொரு சட்டத்தையோ அல்லது ஒழுங்குமுறைகளையோ மீறும்படி வேறு யாருக்கும் ஒருபோதும் வேண்டுகோள் விடுக்க வேண்டாம்.
- இந்த விதி, குறித்த நிறுவனத்தின் கொள்கைகள், உங்கள் பிரிவின் பிரத்யேக கொள்கைகள், சட்டங்கள் மற்றும் விதியைப் புரிந்துகொண்டு பின்பற்றவும்.

III. பேசுங்கள்:

- நெறிமுறைகள் தொடர்பான கேள்விகள் மற்றும் நாணயம் சம்பந்தமான கவலைகள் தொடர்பாக குரலெழுப்பவும், பாகுபாடு அல்லது துன்புறுத்தல் விஷயங்கள், இந்த விதி மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் நமது கொள்கைகளை மீறுவதாக புகாரளிக்கவும் பிராண்ட்சாஃப்வே தனது பணியாளர்களை தாராளமாக ஊக்குவிக்கிறது.
- நாணயம் தொடர்பான கவலையை எழுப்பும் அல்லது எழுப்ப உதவி செய்யும் எவருக்கும்
- எதிராக பழிவாங்கும் நடவடிக்கை எடுப்பதை பிராண்ட்சாஃப்வே முற்று முழுதாக தடைசெய்கிறது. ஒரு புகார் வழங்கிய பின்னர் உங்களைப் பழிவாங்கியுள்ளதாக அல்லது நியாயமற்ற முறையில் நடத்தியுள்ளதாக நீங்கள் உணர்ந்தால், நீங்கள் வேறு எந்த நாணய விஷயம் தொடர்பாக முறையிட்டது போலவே இதையும் முறையிடுவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம். பழிவாங்கும் நடத்தையானது, குற்றம் செய்தவரைத் தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்தல், நிரந்தரமாகப் பணிநீக்கம் செய்தல் உட்பட, இவை மட்டும் தான் என்றில்லாத, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பெறுவதற்கான அடிப்படையாக அமைந்து விடலாம்.
- உங்கள் நாணயம் சார்ந்த கவலைகளை உயர்த்தி எழுப்ப, அனேக வழிமுறைகள் இருக்கின்றன.
- உங்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கிறதும், சந்தர்ப்ப சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருக்கிறதுமான வழியையும், மொழியையுமே நீங்கள் பயன்படுத்த வேண்டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உங்கள் நேரடி மேற்பார்வையாளர் அல்லது மேலாளர் அல்லது மனிதவள பிரதிநிதி, நாணயம் தொடர்பான பிரச்சினைகளில் தலையிடவும் அதனைத் தீர்க்கவும் முடியும், என்றாலும் இவை மாத்திரம் தான் உங்களுக்குள்ள ஒரே வழிவகைகள் அல்ல. புகார் செய்வதற்கான மற்ற வழிவகைகளில், நிர்வகத்தின் அடுத்த கட்டம், நிறுவன தணிக்கையாளர்கள், தலைமை இணக்க அலுவலர், நமது இயக்குநர்கள் குழு அல்லது நமது எதிக்ஸ்பாயிண்ட் ஹாட்லைன் தொலைபேசி ஆகியவை அடங்குகின்றன. எதிக்ஸ்பாயிண்ட் ஹாட்லைன் தொலைபேசியைப் பயன்படுத்தி ஒரு முறையீட்டை எவ்வாறு பதிவு செய்வது என்பது குறித்த தகவல்களை உங்கள் பணியிடத்தில் காணலாம்.

- நாங்கள் உங்கள் இரகசியத்தன்மையை நாங்கள் மதித்து நடப்போம்,
- அதோடு புகார் செய்துள்ள நாணயம் தொடர்பான விடயத்தை விசாரிக்கவும் தீர்வு காணவும் வேண்டியுள்ளவர்களுக்கே நீங்கள் வழங்கும் தகவல்களை அணுகுவார்கள். தேவைப்படும் அளவிற்குத் தவிர, முறையீட்டை விசாரிக்க அங்கீகாரம் பெற்றவர்களைத் தவிர மற்ற ஊழியர்களுக்கு, உங்கள் அடையாளம் அல்லது தனிப்பட்ட விவரங்களை வெளியிட மாட்டோம்.
- கிடைக்கக்கூடியதாக இருந்து சட்டம் அனுமதிக்கிற இடங்களில், நீங்கள் எதிக்ஸ்பாயிண்ட் ஹாட்லைன் தொலைபேசி மூலமாக, முற்றிலும் அநாமதேயமானதோர் முறையீட்டைச் செய்யலாம்,
- ஆனால் அப்படிச் செய்வது, எங்களுக்கு அந்த முறையீட்டை விசாரிப்பதை அதிகச் சிரமமானதாக ஆக்கும்.
- நீங்கள் அநாமதேயமாக புகார் செய்திருந்து, உங்கள் தொடர்பு விவரங்களை எங்களுக்குத் தரவில்லை என்றால், விசாரணை நிலை குறித்து எங்களால் உங்களுக்குத் தெரிவிக்க இயலாமல் போகும். நாணயம் தொடர்பான அநாமதேய புகார்கள் தொடர்பான விதிகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. உதாரணமாக, பல நாடுகள் (முக்கியமாக ஐரோப்பிய ஒன்றியத்தில்) அநாமதேயமாக புகார் செய்வதைத் தடைசெய்கின்றன அல்லது அநாமதேய முறையீட்டை நிதி, கணக்கியல், வங்கி மற்றும் ஊழல் எதிர்ப்புக்கான உள் கட்டுப்பாடுகளின் மீறல்களுக்கு மட்டும் எனக் கட்டுப்படுத்துகின்றன.
- தெரிந்தே ஒரு தவறான குற்றச்சாட்டை முன்வைப்பது அல்லது தவறான தகவல்களை வழங்குவது என்பது, தற்காலிகப் பணிநீக்கம் செய்தல் மற்றும் நிரந்தரமாகப் பணிநீக்கம் செய்தல் மற்றும் / அல்லது பொருந்தக்கூடிய சட்டத்தின்படி குற்றவியல் மற்றும் / அல்லது குடிமையியல் நடவடிக்கைகளைத் தொடங்குவது உள்ளிட்டவை மட்டும் என்றில்லாமல், இவை வரையிலான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அடிப்படையாக அமையலாம் என்பதைத் தயவுசெய்து தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.



# பிராண்ட்சாஃப்வே தலைவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது

இணக்க கலாச்சாரத்தை உருவாக்குவதும், நாணயத்தின் உணர்வைத் தழுவுவதும் ஒவ்வொரு பிராண்ட்சாஃப்வே தலைவரின் முக்கிய பொறுப்புகளாகும். பிராண்ட்சாஃப்வேயில் தலைமைப் பாத்திரத்தில் இருக்கும் அனைவரும் அவர்களை முன்மாதிரியாக கொள்வதற்கும், உயர்ந்த நெறிமுறைத் தரங்களை நிலைநிறுத்துவதற்கும் எங்களுக்கு உதவ வேண்டும். நீங்கள் ஒரு அதிகாரியாகவோ அல்லது இயக்குனராகவோ அல்லது ஒரு சிறிய குழுவின் மேற்பார்வையாளராகவோ அல்லது மேலாளராகவோ இருந்தாலும், ஒவ்வொரு பிராண்ட்சாஃப்வே தலைவரிடமும் இதனையே எதிர்பார்க்கிறோம்:

### I. முன்மாதிரிகள் மூலம் வழிநடத்துங்கள்

- நமது கொள்கைகள் மற்றும் சட்டத்தின் கொள்கைகளுக்கு ஏற்ப நாணயத்துடன் செயல்படுவதை உங்கள் செயல்கள் மற்றும் நடத்தை மூலம் காட்டுங்கள்;
- அடி மட்ட தொழிலார்கள் மதிப்பீட்டில் இணக்கம் மற்றும் நாணயத்துக்கு முக்கியத்துவம் கொடுங்கள்; மற்றும்
- வியாபார முடிவுகளைப் பின்தொடர்வது இந்த விதி, நமது கொள்கைகள் அல்லது சட்டத்துடன் ஒருமைப்பாடு அல்லது இணக்கத்தின் உணர்வை விட்டுக்கொடுக்காது என்பதை உறுதிப்படுத்தவும்.

### II. இணக்கத்தை ஊக்குவிக்கவும்

- இந்த விதி மீறல்களுக்கெதிராக தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்படும் ஒரு சூழலை நிறுவுதலும் மற்றும் பழிவாங்கலுக்கு அஞ்சாமல் பணியாளர்கள் தங்கள் புகார்களை செய்ய ஊக்குவியுங்கள்;
- நாணயம் தொடர்பாக பணியாளர்களுடன் உயிரோட்டமுள்ள உரையாடலைப் பேணுங்கள்; மற்றும்
- இந்த விதி மற்றும் நமது கொள்கைகளைச் செயற்படுத்துவது  தொடர்பான நமது எதிர்பார்ப்புகள் குறித்தும் மற்றும் அவை செயல்படுத்தப்படும்போது அவற்றில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுவது குறித்தும் பணியாளர்களுடன் தொடர்பு தொடர்ந்து மேற்கொள்ளுங்கள்.

### III. பணியாளர் கவலைகளுக்கு பதிலளியுங்கள்

- பணியாளர்கள் தொடர்பாக விடயங்களை மரியாதையுடன் செவிமடுத்து தீர்வு வழங்குங்கள். அவற்றை தீவிரமாக எடுத்துக் கொள்வதுடன், உடனடியாகவும் ரகசியமாகவும் அது தொடர்பாக நடவடிக்கை எடுங்கள்.
- இந்த விதி, நமது கொள்கைகள் அல்லது சட்டத்தின் மீறல்களை உடனடியாக புகாரளிக்க பணியாளர்களை ஊக்குவிக்கவும். பணியாளர் முறையாக புகாரளிக்காவிட்டாலும், அது முறையாகப் புகாரளிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு, மீறல் குறித்த அறிவுறுத்தல் பெற்ற தலைவர்களே பொறுப்பாகும்.
- விசாரணையொன்றை நடத்தி முடித்த பிறகு உரிய ஒழுங்கு நடவடிக்கையொன்றை
- எடுத்து முடியுங்கள்.

### IV. பொறுப்புணர்வுடன் இருங்கள்

- பிராண்ட்சாஃப்வேயின் கொள்கைகளை நிலைநிறுத்துவதிலும், நெறிமுறையான பழக்கவழக்கத்தை ஊக்குவிப்பதிலும் பிராண்ட்சாஃப்வே தலைவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். சில நாடுகளில், இந்த விதி, நமது கொள்கைகள் அல்லது சட்டத்தின் மீறல்களுக்கு பணியாளர்கள் சார்பாக பிராண்ட்சாஃப்வே தலைவர்கள் பொறுப்பேற்கக் கூடும்.

# நாணயம் பற்றிய கவலை எழுப்பப்படும் போது என்ன நடக்கும்

I. விசாரணைகள்

- நாணயம் சம்பந்தமான புகார்கள் உள்ளிட்ட இந்த விதியின் மீறல்கள் என சந்தேகிக்கப்படும் அனைத்து புகார்களையும் உடனடியாக விசாரிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நியாயமான மற்றும் வெற்றிகரமான விசாரணைகளுக்கு சம்பந்தப்பட்ட அனைவரின் ஒத்துழைப்பும் இரகசியத்தன்மையும் தேவை. நீங்கள் விசாரணையின் ஒரு பகுதியாக இருந்தால் அல்லது புகார் தொடர்பாக விசாரிக்கப்பட்டால், உங்கள் நேர்மை, நாணயம் மற்றும் இரகசியத்தன்மையை நாங்கள் நம்ப வேண்டும்.

- தலைமை இணக்க அலுவலரின் பங்கு - நாணயம் தொடர்பான புகார்களை விசாரிப்பதற்கு இணக்க அலுவலர் பொறுப்பேற்கிறார், மேலும் விசாரணையின் சில அம்சங்களை மற்றவர்களுக்கும் பொறுப்புச் சுமத்தலாம். விசாரணைகள் தொடர்பான தகவல்கள் இரகசியமாகப் பேணப்படும். சட்டப்படி தேவைப்படும் போது, பிராண்ட்சாஃப்வே சட்டக் குழுவின் ஆலோசனையின் பேரில் அல்லது வேறுவிதமாக தேவைகளைப் பொறுத்து, வெளி அதிகாரிகளுக்கு அல்லது அத்தகைய தகவல் தேவைப்படும் பிராண்ட்சாஃப்வேயில் உள்ள மற்றவர்களுக்கு, விசாரணை சம்பந்தமான தகவல்களை வழங்கும் அதிகாரம், விசாரணைக்குப் பொறுப்பான தலைமை இணக்க அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் நிலை மற்றும் விசாரணை தற்போது செல்லுகின்ற போக்கு ஆகியவற்றை இயக்குநர்கள் குழுவின் தணிக்கைக் குழுவிற்கு ஒரு வழக்கமான அடிப்படையில் தெரிவிக்க முதன்மை இணக்க அலுவலர் வேண்டப்படுவார்.

- நமது பணியாளர்களின் பங்கு - இந்த விதியை திறம்பட செயல்படுத்த  பணியாளர்களின் ஒத்துழைப்பும் விசாரணைகளின் இரகசியத்தன்மையும் மிக அவசியம். எந்தவொரு நாணயம் தொடர்பான விசாரணையிலும் அனைத்து பணியாளர்களும் ஒத்துழைப்பார்கள் என்றும் விசாரணையின் இரகசியத்தன்மையை கைக்கொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

II. இந்த விதியை மீறியதற்காக அபராதம்

இந்த விதியை நாங்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம். விதி மீறல்கள் அவ்வப்பகுதி சட்டத்திற்கு உட்பட்டு, தற்காலிகப் பணிநீக்கம் மற்றும் நிரந்தரப் பணிநீக்கம் மற்றும்/அல்லது மற்றும் / அல்லது பொருத்தமான குற்றவியல் மற்றும் / அல்லது குடிமையியல் நடவடிக்கைகளைத் தொடங்குதல் என்பன வரை, இவை மட்டும்தான் என்றில்லாத ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பெறுவதற்கு அடிப்படையாக அமையலாம். உரிய இடங்களிலும், உரிய போதும், விதி மீறல்களை, விசாரணை செய்யவும், தண்டனை தரவும், மீட்டெடுக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்தனுப்பி வைக்கலாம். உள்ளூர் சட்டத்திற்கு உட்பட்டு, பிராண்ட்சாஃப்வே பணியாளர்களும் விதி மீறியதற்காக ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படலாம், அவையாவன:

- இந்த விதியை மீறுவதற்கு அதிகாரமளித்தல் அல்லது அதில் பங்கேற்றல்;
- விசாரணையின் போது வேண்டுமென்றே தகவல்களை மறைத்தல் அல்லது தவறான தகவல்களை வழங்குதல் அல்லது தவறாக வழி நடத்தல்;
- துணை அதிகாரிகளை போதுமான அளவில் மேற்பார்வையிடத் தவறியதன் விளைவாக ஏற்படும் விதி மீறல்கள்; மற்றும்
- நாணயம் தொடர்பாக குறியீடு செய்த ஒருவரை பழிவாங்குதல் அல்லது அவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.



# வியாபாரம் எவ்வாறு நடத்தப்பட வேண்டும்

நாம் எவ்வாறு வியாபாரம் செய்கின்றோம் என்பதன் முக்கிய பிரதிபலிப்பு தான் ஒரு நிறுவனமாக நாம் யார் என்பதைக் காட்டும். நாங்கள் எப்போதும் பிராண்ட்சாஃப்வேயின் வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள், போட்டியாளர்கள் மற்றும் பணியாளர்களுடன் நேர்மையாக, நியாயமாக மற்றும் நாணயமாக நடந்து கொள்ள வேண்டும். மற்றவர்களை விட தனக்கு சாதகமாக அமைய வேண்டும் என்ற நோக்கில் சூழ்ச்சியுடன் கையாளுதல், மறைத்தல், சலுகை பெற்ற தகவல்களை துஷ்பிரயோகம் செய்தல், பொருட்களின் உண்மைத் தன்மையை தவறாக சித்தரித்தல் அல்லது வேறு ஏதேனும் நியாயமற்ற கையாளுதல் ஆகியவைகளை, பிராண்ட்சாஃப்வேயின் பிரதிநிதியாக செயற்படும்போது செய்யக் கூடாது.

### I. சமூகப் பொறுப்பு

பிராண்ட்சாஃப்வே ஒரு நல்ல கூட்டுப் பொறுப்புள்ள குடிமகனாக, அடிப்படை மனித உரிமைகளுக்கான தனது ஆதரவையும், சட்டவிரோத பாகுபாடு மற்றும் மனித கடத்தல் உள்ளிட்ட மனித உரிமைகளை துஷ்பிரயோகம் செய்யும் வணிக நடைமுறைகளைத் தவிர்ப்பதற்கான தனது உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துகின்றது. தொழிலாளர் நலன், சுற்றுச்சூழல், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் உள்ளூர் சமூகங்களில் நமது செயல்பாடுகளின் சாத்தியமான தாக்கங்கள் போன்ற சிக்கல்களை கவனமாக நிர்வகித்தல் என இதனை விளக்கம் கொள்ளலாம்.

பணியாளர்கள் தமது தொழிலுக்கு பங்கம் ஏற்படாத வகையில், தொண்டு நடவடிக்கைகள் அல்லது அரசியல் ஈடுபாடு போன்ற வழிகளில் தங்கள் உள்ளூர் சமூகத்தில் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் என்று பிராண்ட்சாஃப்வே ஊக்குவிக்கிறது, ஆனால் வேண்டிக் கொள்ளவில்லை. எவ்வாறாயினும், எந்தவொரு பணியாளரையும் உள்ளூர் சமூகத்தில் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் அல்லது தொண்டு அல்லது அரசியல் நடவடிக்கைகளுக்கு நேரத்தையும் பணத்தையும் பங்களிக்க வேண்டும் என வற்புறுத்தவில்லை.

பிராண்ட்சாஃப்வேயின் நிதி அல்லது சொத்துக்களில் இருந்து தொண்டு அல்லது அரசியல் பங்களிப்புகள் செய்வதாயின், நிறுவனத்தின் கொள்கைகள் பரிந்துரைகளுக்கு ஏற்பவே செய்யலாம்.

### II. ஒப்பந்தக்காரர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுடனான ஒப்பந்தங்கள்

சந்தையில் பிராண்ட்சாஃப்வேயின் கொடுக்கல் வாங்கல்கள் சாதகவாதம் அல்லது முறையற்ற செல்வாக்கின் தோற்றத்தால் களங்கப்படுத்த முடியாது. தெளிவான மற்றும் புறநிலை அளவுகோல்களின் அடிப்படையில் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்களில் விலையும், பொருளும், சேவைத் தரமும், கொண்டுவந்து கொடுக்கும் காலத் திட்டமும், நன்னெறி சார்ந்த நடத்தைக்கான புகழும், உயர் தர ஆரோக்கியமும், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த நியமங்களும் அடங்குகின்றன.
அதன் ஒப்பந்தக்காரர்கள், விநியோகஸ்தர்கள், முகவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இந்த விதி, குறித்த சட்டங்கள் மற்றும் பிராண்ட்சாஃப்வேயின் இதர கொள்கைகளுக்கு இணங்குவார்கள் என்று பிராண்ட்சாஃப்வே எதிர்பார்க்கிறது.

### III. முறையற்ற பணப்பட்டுவாடாக்கள், ஊழல் மற்றும் லஞ்சம்

லஞ்சம், மறைமுகக் பணப்பட்டுவாடாக்கள் அல்லது எந்தவொரு சூழ்நிலையிலும் சாதகத்தைப் பெறுவதற்கான முறையற்ற அன்பளிப்புக்கள் அல்லது பரிசுகள் போன்ற முறையற்ற பணப்பட்டுவாடாக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படாது. உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு நாட்டிலும், அரசு மற்றும் தனியார் துறைகளில், அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் முறையற்ற பணப்பட்டுவாடாக்களை பிராண்ட்சாஃப்வே வெளிப்படையாக தடைசெய்கிறது. பெரும்பாலும் அரசாங்க நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்கல்களை எளிதாக்குவதற்காக செய்ய வழங்கப்படும் “வசதி பணப்பட்டுவாடாக்கள்” உள்ளூர் அதிகார வரம்பில் சட்டபூர்வமானதாக அல்லது வழமையாக இருந்தாலும் முறையற்ற பணப்பட்டுவாடாக்களாகவே கருதப்படும்.

பயனாளிக்கு இது சம்பந்தமான ஒழுங்கான கொள்கை இல்லாத வரைக்கும், நியாயமான மற்றும் வரையறுக்கப்பட்ட பரிசுகள், வணிக பொழுதுபோக்கு மற்றும் வாடிக்கையாளர் பயணம் மற்றும் பிராண்ட்சாஃப்வே வணிகத்தின் விளம்பரத்துடன் நேரடியாக தொடர்புடைய வாழ்க்கைச் செலவுகளுடன், முறையற்ற பணப்பட்டுவாடாக்களுடன் நேரடியாகத் தொடர்பை உண்டாக்க அவசியமில்லை. இந்த விதிக்கமைய எந்தவொரு நிறுவனம், வணிக மற்றும் பிராந்திய கொள்கைகளான பயண மற்றும் பொழுதுபோக்கு கொள்கை அல்லது வணிக செலவு திருப்பிச் செலுத்தும் கொள்கை போன்றவற்றுக்கு உட்பட்டு இந்த உருப்படிகள் ஏற்றுக் கொள்ளத்தக்கவை. தனிப்பட்ட தூண்டுதலின் அடிப்படையில் வணிகத்தை பாதுகாக்க எந்தவொரு பொருளையும் வழங்குவது அல்லது ஏற்பாடு செய்வது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்க.

சேவைகளுக்கான அன்பளிப்புகள் அல்லது சிறு உதவிகள், சட்ட மற்றும் உள்ளூர் நடைமுறைக்கு ஏற்ப வழங்கப்படலாம்; இருப்பினும், அத்தகைய அன்பளிப்புகள் செலுத்தப்படும் சூழலில் அவை லஞ்சம் என்று தவறாகக் கருதப்பட முடியாது என்ற உணர்திறனை நீங்கள் கொண்டிருக்க வேண்டும். இலஞ்சம் வழங்கப்படும் முறை எனக் கருதப்படும் வழிகளில் கட்டணம் அல்லது விற்பனை பங்கு இலாபங்கள் செலுத்தப்படக்கூடாது. அனைத்து பணப்பட்டுவாடாக்களும் பிராண்ட்சாஃப்வேயின் புத்தகங்களில் தெளிவாகவும் துல்லியமாகவும் பதிவு செய்யப்பட வேண்டும். சூழ்நிலைகளில் ஏதேனும் கட்டணம் கோரப்பட்டால் சந்தேகமானவை என்று நீங்கள் நம்புகிறீர்கள் என்றால் உங்கள் மேலாளர் அல்லது தலைமை இணக்க அதிகாரியிடமிருந்து வழிகாட்டுதலைப் பெற வேண்டும்.

உங்கள் வேண்டுகோள் பரிசீலிக்கப்படுவதற்கோ, பணியமர்த்தப்படுவதற்கோ, பதவி உயர்வு பெறுவதற்கோ, இடமாற்றம் செய்யப்படுவதற்கோ அல்லது தொடர்ந்து வேலைவாய்ப்பைக் கொண்டிருப்பதற்கோ ஈடாக பிராண்ட்சாஃப்வே ஒருபோதும் உங்களிடமிருந்து எந்தவொரு கட்டணத்தையோ அல்லது ஆதரவையோ கேட்காது. வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதற்கீடாக யாராவது அத்தகைய கட்டணம் அல்லது ஆதரவை கோருவது இந்த விதியை மீறுவதாகும், மேலும் இது ஒரு விதி மீறல் என புகாரளிக்கப்பட வேண்டும்.

### IV. கருத்து வேற்றுமைகள்

பிராண்ட்சாஃப்வே ஊழியர்கள் தங்களது தனிப்பட்ட மற்றும் ஏனைய தொழில்சார் செயல்பாடுகளை பிராண்ட்சாஃப்வே இற்கான தங்களது பொறுப்புக்களுடன் முரண்படாத விதத்தில் அமைத்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். அக்கறை முரண்பாடாக அமையும் அல்லது அக்கறை முரண்பாடொன்றுக்கான தோற்றப்பாட்டை உருவாக்கும் எந்தவொரு செயல்பாட்டையும் தவிர்ந்து கொள்வது பிராண்ட்சாஃப்வே ஊழியர்களின் கடமையாகும்.

பிராண்ட்சாஃப்வேயின் நலன்களுடன் ஒரு நபரின் தனிப்பட்ட நலன்கள் தலையிடும் போது அல்லது ஒவ்வாத போது "கருத்து வேற்றுமை" ஏற்படுகிறது. ஒரு பணியாளர், அதிகாரி அல்லது இயக்குனர் நடவடிக்கைகளை எடுக்கும் போது, அது அவரது வேலையின் குறிக்கோள் மற்றும் பயனுள்ள செயல்திறனுடன் பொருந்தாத நலன்களைக் கொண்டிருக்கும்போது, கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். சாத்தியமான கருத்து வேற்றுமைகள் இதில் அடங்கும், ஆனால் இவை மட்டும் அல்ல:

- உங்களுக்கு தனிப்பட்ட அல்லது நிதி ஆர்வம் உள்ள கொடுக்கல் வாங்கல்களில் பிராண்ட்சாஃப்வே பிரதிநிதித்துவப்படுத்துவது;
- தனிப்பட்ட அல்லது நிதி ஆர்வம் உள்ள நீங்கள் அல்லது உங்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் 1% க்கும் குறைவான முதலீட்டை வைத்திருக்கும் நிறுவனத்தில் விநியோகஸ்தர்களுக்கு வணிகத்தை இயக்க வழி செய்தல்;
- வாடிக்கையாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் அல்லது விநியோகஸ்தர்களிடமிருந்து உங்கள் வணிகத் தீர்ப்பை பாதிக்கக்கூடிய அல்லது சார்பாக பணியாற்றக்கூடிய தனிப்பட்ட நன்மைகள் அல்லது பரிசுகளைத் தேடுவது;
- பிராண்ட்சாஃப்வே வளங்களை அல்லது உங்கள் தொழில் நிலை அல்லது செல்வாக்கை பொருத்தமற்ற தனிப்பட்ட நலனுக்காக அல்லது உங்கள் வெளிப்புற நடவடிக்கைகள் அல்லது நலன்களை மேம்படுத்துவதற்காக தவறாகப் பயன்படுத்துதல்;
- பிராண்ட்சாஃப்வேயின் போட்டியாளரின் சார்பாக போட்டியிடுவது அல்லது பணியாற்றுவது;
- உள் வர்த்தகத்தில் ஈடுபடுவது; அல்லது உங்கள் தனிப்பட்ட நலன்கள் பிராண்ட்சாஃப்வேயின் சிறந்த நலன்களிலிருந்து வேறுபடக்கூடிய பிற சூழ்நிலைகள்.

கருத்து வேற்றுமைகள் குறிப்பிட்ட ஒப்புதல் இல்லாமல் தவிர்க்கப்பட வேண்டும். ஒரு கொடுக்கல் வாங்கல் பொருத்தமானதா அல்லது சந்தேகத்துக்குரியதா என சந்தேகம் இருக்கும்போது, உங்கள் மேலாளர் அல்லது தலைமை இணக்க அலுவலருடன் கலந்தாலோசிக்கவும். கருத்து வேற்றுமைகளாகக் கருதப்படக்கூடிய சூழ்நிலைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் விவரிப்பது கடினம். சந்தேகத்துக்குரிய பகுதிகள் அதனைத் தொடர்ந்து வரவுள்ள சூழ்நிலைகளை அங்கீகரிப்பதன் மூலம் நியாயமான முறையில் பரிசீலிக்கப்படும். கருத்து வேற்றுமைக்கான திட்டவட்டமான சாத்தியம் உள்ள இடத்தில், அதனை சரி செய்ய பணியாளருக்கு நியாயமான நேரம் வழங்கப்படும். சில அதிகார வரம்புகளின் படி, வழக்கத்திலுள்ள சட்டத்தின் கீழ் சில நலன் முரண்பாடுகள் தடைசெய்யப்பட்டுள்ளன, மேலும் குறித்த சட்டத்தை மீறும் வகையில் இது போன்ற எந்தவொரு செயலையும் பணியாளர்கள் மேற்கொள்ளக் கூடாது.

### V. சாத்தியமான கருத்து வேற்றுமை வெளிப்பாடு

கருத்து வேற்றுமைக்கு வழிவகுக்கும் செயல்கள் அல்லது அதற்கு இட்டுச் செல்லும் உறவுகளில் ஈடுபடும் பணியாளர்கள் அதனை வெளிப்படுத்த வேண்டும் பிராண்ட்சாஃப்வேயின் சிறந்த நலன்களைப் பாதுகாப்பதற்காக நிர்வாகத்தின் மறுஆய்வு மற்றும் ஒப்புதலுக்காக அது சமர்பிக்கப்பட்டதும் சாத்தியமான வேற்றுமைகள் எழ வாய்ப்பு. குறிப்பாக இத்தகைய வெளிப்பாடுகள் குறிப்பாக கோரப்பட்டால் எழுத்து மூலமாக சமர்ப்பிக்கப்படும்.

### VI. வெளிப்புற வேலை வாய்ப்பு

முழுநேர பணியாளர்களுக்கு துணை அல்லது இரண்டாம் நிலை வேலைவாய்ப்பு ஊக்கம் கெடுதலாகவும் சட்டவிரோதமாக இருக்கலாம். உங்களிடம் வேலைவாய்ப்பு ஒப்பந்தம் அல்லது பிராண்ட்சாஃப்வே நிறுவனத்துடன் ஒப்பந்தம் இருந்தால், அது குறிப்பாக துணை அல்லது இரண்டாம் நிலை வேலைவாய்ப்பைத் தடுக்கலாம். ஒப்பந்த

அடிப்படையில் தடைசெய்யப்படாத மற்றும் அவ்வாறு செய்வது சட்டவிரோதமானது அல்ல என்ற நிலையில், அந்த வேலைவாய்ப்பு பிராண்ட்சாஃப்வே நிறுவனத்துக்கான உங்கள் கடமைகளில் தடைகள் ஏற்படுத்தாவிட்டால் அல்லது பிராண்ட்சாஃப்வே நிறுவனத்தின் நலன்களுடன் முரண்படாவிட்டால் துணை அல்லது இரண்டாம் நிலை வேலைவாய்ப்பு தடை செய்யப்படாது. முழு நேர பிராண்ட்சாஃப்வே பணியாளர்கள் ஒருபோதும் போட்டியாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது பிராண்ட்சாஃப்வே வாடிக்கையாளர்களுக்காக வேலை செய்யக் கூடாது. உங்களிடம் துணை அல்லது இரண்டாம் நிலை வேலைவாய்ப்பு இருந்தால், தயவுசெய்து அதை பொருத்தமான நிர்வாக அலுவகர்களுக்கு அறிவிக்கவும்.

### VII. வெளிக்கள நலன்கள்

மூன்றாம் தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களுக்குக் பொறுப்பான பிராண்ட்சாஃப்வே பணியாளர்கள், பிராண்ட்சாஃப்வே ஒப்பந்தங்கள் அல்லது போட்டியிடும் நிறுவனங்கள் அல்லது வணிகங்களில் எந்தவொரு பொருளாதார ஆர்வத்தையும் கொண்டிருக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. பொது வர்த்தக நிறுவனங்களில் வைப்பிலிடப்பட்டுள்ள தனிப்பட்ட பங்கு நலன்கள், குறித்த பணியாளரின் பிராண்ட்சாஃப்வே விஷயங்களில் பாதிக்கக் கூடிய வகையில் அமையாவிட்டால், அது மீறலாக கருதப்படுவதில்லை.

### VIII. வெளிப்புற இயக்குனர்கள்

நமது பணியாளர்கள் தலைமை இணக்க அலுவலரிடமிருந்து எழுத்து மூல முன் ஒப்புதலைப் பெறாமல், எந்தவொரு இலாப நோக்கற்ற நிறுவனங்களைத் (இலாப நோக்கற்ற அல்லது தொண்டு நிறுவனங்களைத்) தவிர மற்ற நிறுவனங்களில் இயக்குநர்களாக அல்லது அறங்காவலர்க்களாக அல்லது ஆலோசகர்களாக பணியாற்றுவதை தடைசெய்துள்ளதுடன், இது நியாயமற்ற முறையில் அல்லது தன்னிச்சையாக நிறுத்தப்படாது.

### IX. கூட்டாண்மை நிறுவன வாய்ப்புகள்

பிராண்ட்சாஃப் நிறுவனத்தின் சட்டப்பூர்வ நலன்களை முன்னெடுத்துச் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் எழும் போது, அப்படிச் செய்வதற்கான கடமை பணியாளர்களுக்கு உள்ளது அதோடு அவர்கள் கீழ்காண்பவற்றிலிருந்து தடை செய்யப்பெறுகிறார்கள்:

- கூட்டாண்மை நிறுவனத்தின் சொத்து, தகவல் அல்லது பதவியைப் பயன்படுத்துவதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட சந்தர்ப்பங்களைத் தங்களுக்காக எடுத்துக்கொள்வது;
- கூட்டாண்மை நிறுவனத்தின் சொத்து, தகவல் அல்லது பதவியை தனிப்பட்ட லாபத்திற்காகப் பயன்படுத்துதல்; மற்றும் பிராண்ட்சாஃப்வேவுடன் போட்டியிடல்.

### X. பரிசுகள், உதவிகள் மற்றும் பொழுதுபோக்கு

வணிக பரிசுகள், உதவிகள் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவை ஆரோக்கியமான மற்றும் வெளிப்படையான வணிக உறவுகளின் நடத்தையில் தலையிடக்கூடும், மேலும் அவற்றை எச்சரிக்கையுடன் அணுக வேண்டும். மற்றபடி, சட்டம் அல்லது ஒழுங்குமுறையால் தடைசெய்யப்படாத இடங்களில், பெறுநரின் வணிகத் தீர்ப்பைப் மற்றபடி பாதிக்கும் அல்லது பாதிக்கும் என்றா அபிப்பிராயத்தைக் கொடுக்கும், சட்டவிரோதமாக உள்ள, அளவிற்கதிகமான பரிசுகள், வழக்கத்திற்கு மாறான விருந்தோம்பல், தாராளமான பொழுதுபோக்கு அல்லது மற்ற சகாயங்களை, மூன்றாம் தரப்பினரிடமிருந்து, விரும்பத்தகாத, பணமாக அல்லது பணத்திற்கு சமமான வடிவத்தில்கொடுக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ கூடாது.

அரசு அதிகாரிகளுக்கான பரிசுகளும் பொழுதுபோக்குகளும் சட்டம் அல்லது ஒழுங்குமுறைகளால் தடைசெய்யப்படலாம் அல்லது கட்டுப்படுத்தப்படலாம். ஒரு அரசாங்க அதிகாரிக்கு பரிசு வழங்குவதற்கும் அல்லது பொழுதுபோக்கு முறையில் மகிழ்விப்பதற்கும் முன், முதன்மை இணக்க அதிகாரியுடன் அது பற்றி கலந்தாலோசிக்கவும்.

பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் மாத்திரமே, பிராண்ட்சாஃப்வேயின் செலவில் மற்றவர்களுக்கு பரிசுகள், உதவிகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் வழங்கப்படலாம்:

- அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட பிராண்ட்சாஃப்வே வணிக நடைமுறைகளுடன் ஒத்துப்போக வேண்டும் என்பதுடன் அவைகள் நிறுவனத்தின் புத்தகங்கள் மற்றும் பதிவுகளில் சரியாக பதிவு செய்யப்பட்டுமிருக்க வேண்டும்;
- அவை போதுமான அளவில், வடிவத்தில் வரையறுக்கப்பட்டிருப்பின் அவை லஞ்சம் அல்லது செலுத்துதல் எனக் கருதப்படாது;
- அவை வழக்கத்திலுள்ள உள்ளூர் சட்டத்திற்கு அல்லது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறை அல்லது சமூக தரநிலைகளுக்கு முரணாக இல்லை; மற்றும்
- பெறுநரின் அடையாளம் உள்ளிட்ட உண்மைகளை பகிரங்கமாக வெளியிடுவது இருவருக்கும் சங்கடத்தை ஏற்படுத்தாது.

### XI. கடன்கள்

பிராண்ட்சாஃப்வேயில் இருந்து நிறுவனத்தின் எந்தவொரு பணியாளருக்கும் கடன் வழங்குவதற்கு இயக்குநர்கள் குழு அல்லது அதன் பொறுப்பாளரிடமிருந்து முன் ஒப்புதல் தேவைப்படும்.

# சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குதல்

இலவச, நியாயமான மற்றும் நெறிமுறை சார்ந்த வணிக நடைமுறைகள் மற்றும் பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்களுக்கும் இணங்குவதில் பிராண்ட்சாஃப்வே உறுதியாக உள்ளது. பொருந்தக்கூடிய சட்டங்களைக் கடைப்பிடிப்பதில் ஏற்படும் சிக்கல்கள் காரணமாக செயற்பாட்டு தாமதங்களை ஏற்படக்கூடும், அத்துடன் நமது நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும் என்பதுடன், பிராண்ட்சாஃப்வேக்கு குற்றவியல் மற்றும் சிவில் அபராதம் மற்றும் / அல்லது ஏற்றுமதி சலுகைகளை இழக்கும் வாய்ப்பும் ஏற்படலாம்.

உங்களுக்கும் மற்ற அனைத்து பிராண்ட்சாஃப்வே பணியாளர்களுக்கும் அபராதம் விதிக்கப்படலாம் அல்லது குறித்த சட்டங்களை மீறியதற்காக குற்றவியல் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த எல்லா காரணங்களுக்காகவும், குறித்த சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை நீங்கள் கவனத்தில் வைத்திருப்பது மற்றும் அதற்கு கீழ்ப்படிதலாக இருப்பது முக்கியம்.

### I. போட்டி மற்றும் நம்பிக்கையற்ற சட்டங்கள்

போட்டி மற்றும் நம்பிக்கையற்ற சட்டங்கள் திறந்த வர்த்தகத்தை பாதுகாக்கின்றன மற்றும் வர்த்தகத்தை கட்டுப்படுத்தும் அல்லது நியாயமான போட்டியை கட்டுப்படுத்தும் நடத்தை தடைசெய்கின்றன. இந்த சட்டங்கள் நமது வணிகத்தின் ஒவ்வொரு நிலைக்கும் பொருந்தும். அவை, சந்தை சக்தியை தவறாக பயன்படுத்துதல், விலை நிர்ணயம், சந்தை பகிர்வு அல்லது ஏலம்-மோசடி போன்ற நடைமுறைகளை எதிர்த்து. போராடுகின்றன. பிராண்ட்சாஃப்வே பணியாளர்கள் நமது சேவைகள் அல்லது தயாரிப்புகளின் விலை நிர்ணயம் செய்தல், அதற்கான சந்தைகள், பிரதேசங்கள் அல்லது வாடிக்கையாளர்களை ஒதுக்குதல், மற்றும் ஒரு சில வாடிக்கையாளர்கள் அல்லது வழங்குநர்களை புறக்கணித்தல், உற்பத்தியைக் குறைத்தல் அல்லது மற்றாபடி கட்டுப்படுத்துதல், அல்லது மற்றபடி வர்த்தகத்தைச் செய்யாமல் இருத்தல் அல்லது சட்டத்தால் தடைசெய்யப்பட்ட கொள்ளையடிக்கும் அல்லது போட்டி எதிர்ப்பு பொருளாதார நடைமுறைகளில் ஈடுபடுவது ஆகியவை தொடர்பான விடயங்களில், நமது போட்டியாளர்களுடன் விவாதிக்க அல்லது எந்தவொரு ஏற்பாட்டினுள்ளும் நுழைய அல்லது புரிதல்களையும் மேற்கொள்ள கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளனர். இந்த வகை நடத்தையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் நிறுவன பணியாளர்களுக்கு குறிப்பிடத்தக்க அபராதங்கள் பொருந்தக்கூடும்; இவற்றில் கணிசமான பண அபராதம் மற்றும் சிறைத்தண்டனை ஆகியவையும் அடங்கும்.

### II. வர்த்தக கட்டுப்பாடு, தடைகள் மற்றும் புறக்கணிப்பு எதிர்ப்பு சட்டங்கள்

பிராண்ட்சாஃப்வே செயல்படும் பல நாடுகளில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் மற்றும் / அல்லது பொருளாதாரத் தடைகள் அல்லது பொருளாதாரப் புறக்கணிப்புகளைக் கையாளும் சட்டங்கள் உள்ளன. ஏற்றுமதி கட்டுப்பாடு மற்றும் இறக்குமதி சட்டங்களுக்கு இணங்க, நீங்கள் எதை அனுப்புகிறீர்கள் / பெறுகிறீர்கள், யாருக்கு அல்லது யாரிடமிருந்து நீங்கள் அனுப்புகிறீர்கள் / பெறுகிறீர்கள், நீங்கள் அனுப்பும் பொருட்கள் எங்கு செல்லும் என்பதைப் புரிந்துகொள்வது அவசியம். தடைசெய்யப்பட்ட அமைப்புகள் பட்டியல் அல்லது தண்டனைகள் விதிக்கப்பட்ட பட்டியல்களில் அடையாளம் காணப்பட்ட எந்தவொரு நபர் அல்லது நிறுவனத்துடன் வணிக அல்லது நிதி கொடுக்கல் வாங்கல்களை நடத்துவதற்கு பிராண்ட்சாஃப்வே தடைசெய்துள்ளது. குறித்த நாடு எதிர்க்கும் எந்தவொரு தடைகள் அல்லது புறக்கணிப்புகளிலும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பங்கேற்க புறக்கணிப்பு எதிர்ப்பு சட்டங்கள் தடை விதிக்கின்றன. புறக்கணிப்பு கோரிக்கைகள் பெரும்பாலும் ஏல அழைப்புகள், வரைவு ஒப்பந்தங்கள், கொள்முதல் ஆர்டர்கள், கடன் கடிதங்கள் மற்றும் கப்பல் ஆவணங்கள் அல்லது அறிவுறுத்தல் உள்ளிட்ட எந்தவொரு வடிவத்திலும் வரலாம். சில புறக்கணிப்பு கோரிக்கைகள் தெளிவானவை என்றாலும், மற்றும் சில புறக்கணிப்பு கோரிக்கைளில் தெளிவு காணப்படமாட்டாது.

### III. அரசாங்கங்கள் மற்றும் அரசாங்க பிரதிநிதிகளுடன் கையாள்வது

